# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 67 | 06-09-2012

23-08-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும்**

**தொடக்க உரையாடல் : த. வி. ரெஷாங்கன்**

இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தலைமையில் 44 நாடுகள் ஜூலை 1944 ல் பிரெட்டன் வூட்ஸ் பகுதியில் கூடின. இந்தக் கூட்டம் போருக்குப் பின்னான சமாதானம் மற்றும் பொருளாதாரத் திட்டமிடலுக்காகவே அமைந்தது. இதில் பல அரசுகள் உலக சமாதனத்தை உலகப் பொருளாதார ஒருங்கிணைவின் மூலமே கொண்டு வரமுடியும் என்ற வாதத்தை வைத்தன.

இந்தப் பொருளாதாரக் கூட்டிணைவு உலகச்சந்தை மூலமும் தாராளமயமாக்கல் மூலமும் மட்டுமே ஏற்படும் என்ற கூட்டான முடிவும் எடுக்கப்பட்டது.
இதற்காகவே இரண்டு நிறுவனங்கள் தோற்றம் பெற்றன அவைதாம் (IMF எனப்படும்) சர்வதேச நாணய நிதியமும் (World Bank எனப்படும்) உலக வங்கியும் ஆகும். உலக வங்கி உண்மையில் அபிவிருத்தி மீள்கட்டுமான வங்கியாகவே ஆரம்பிக்கப்பட்டது.

இதில் இன்னொரு நிறுவனமும் தோற்றம் பெற்றது அது உலக வர்த்தக நிறுவனம்.

சர்வதேச நாணய நிதியம் 1947 ல் இயக்கத் தொடங்கியது. இதற்குத் தலைவராக பெரும்பாலும் ஐரோப்பியர் இருப்பதும். உலக வங்கித் தலைவர் அமெரிக்கராக இருப்பதும் வழக்கம்.

சர்வதேச நாணய நிதியத்தில் அமெரிக்க அதிகாரம் 18% இருக்கிறது.

இந்த இரண்டு நிறுவனங்களும் அமெரிக்க டொலர் ஒழுங்குடைமையை பேணுகின்றன. அதாவது அமெரிக்க டொலரை ஒரு நம்பிக்கைக்குரிய பணமாக வைத்துச் செயல்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கம், நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளைச் சீர்படுத்தி அவர்களுடைய அபிவிருத்திக்கு உதவுவதும் உலக வர்த்தகத்தில் ஈடுபட அந்த நாடுகளைத் தூண்டுவதன் மூலம் நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்தி அந்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும்.

> சர்வதேச நாணய நிதியமே உலகின் தனியான பொருளாதாரக்கொள்கை வகுக்கும் அரசு இல்லாத நிறுவனமாகும். ஆனால் உலகின் பெருமளவு வறுமைக்கு இந்த நிறுவனங்களே காரணம் என்பது பலரும் அறியாத உண்மை. நாடுகள் தங்கள் அபிவிருத்திக்காக பெறும் கடன்கள் அந்த நாட்டு மக்களுக்கு எந்த அளவில் போய்ச்சேரும் என்பதில் ஐயம் இருக்கவே செய்கிறது.

மேலும், அவர்களின் கொள்கைகளாக நியமிக்கப்பட்ட நாணய மாற்று முறையில் இருந்து திறந்து விடப்பட்ட நாணய மாற்று முறையை கொண்டுவரல், தங்கத்துக்கு எதிராக நாணய புழக்கத்தைக் கொண்டுவந்து நாடுகள் தங்கள் வர்த்தக நிலுவையைச் சரி செய்தல்(நாணய நிதிய மேற்பார்வையில் தங்க இருப்புக்கு எதிராக கடன் பெறல்), ஒரே மாதிரியான நாணய மாற்றுக் கொள்கையை நாடுகளிடையே ஏற்படுத்தல்.

சர்வதேச நாணய நிதியமே உலகின் தனியான பொருளாதாரக்கொள்கை வகுக்கும் அரசு இல்லாத நிறுவனமாகும். ஆனால் உலகின் பெருமளவு வறுமைக்கு இந்த நிறுவனங்களே காரணம் என்பது பலரும் அறியாத உண்மை. நாடுகள் தங்கள் அபிவிருத்திக்காக பெறும் கடன்கள் அந்த நாட்டு மக்களுக்கு எந்த அளவில் போய்ச்சேரும் என்பதில் ஐயம் இருக்கவே செய்கிறது.


நாடுகள் தங்கள் வர்த்தக நிலுவையைச் சரிசெய்யும் நோக்கில் இந் நிறுவனங்களிடமிருந்து இருந்து பெறும் குறுங்கால, நீண்ட காலக் கடன்கள் நாட்டின் கடன் சுமையை மேலும் மேலும் அதிகரிக்கிறது.

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**இலங்கையில் வர்க்கக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள்**

சி. கா. செந்திவேல் | 06-09-2012



எல்டன் மேயோ

**எல்டன் மேயோ** (George Elton John Mayo, டிசம்பர் 26, 1880 - செப்டம்பர் 7, 1949) ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு உளவியலாளர் மற்றும் மெய்யியலாளர்.

இவர் தொழிற்துறை அமைப்பில் உழைக்கும் பணியாளர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். அந்த ஆய்வுக்கு ஹாதோர்ன் ஆய்வுகள் என்று பெயர். இந்த ஆய்வு முடிவானது மேலாண்மையியலில் மனித உறவுகள் கொள்கை (Human Relations Theory) எனும் புதிய பிரிவுக்கு வழி வகுத்தது. இதனால் இவர் மனித உறவுகள் கொள்கையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் 1919 - 1923 காலத்தில் பணியாற்றிய இவர் பின்னர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். 1926 முதல் 1947 வரை ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும்

முன்பக்கத் தொடர்ச்சி..

இவ்வதிகரிப்பானது, கடனை செலுத்தவும் கடனுக்கான வட்டியை செலுத்தவும் சில நேரங்களில் வட்டியே இன்னுமொரு கடனாக மாறிய நிலையிலும் நாடுகள் கடன் சுமையில் இருக்க, நாட்டின் வளங்கள் பெரு வர்த்தக நிறுவனங்கள் கைகளுக்கு குறைந்த விலையில் சென்று அடைகிறது.

இது நாட்டு மக்களிடையே சரியாக வளம் பங்கிடப்படுவதைப் பாதித்து நாட்டை இன்னும் வறுமை நிலைக்கு இட்டுச் செல்கிறது.

இதுவே பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் இருக்கும் நிலை. கடன் பெற்ற அரசுகள் அவர்களின் பொருளாதரா திட்டமிடலுக்கு அமைவாகவே வேலை செய்திடல் வேண்டும் அதற்கமைவாகவே கடன் வட்டிவீதம், மீள செலுத்தலுக்கான காலம் என்பன தீர்மானிக்கப்படும். ஆக நாடுகளின் சுயங்கள் இந்த நிலையில் இழக்கப்பட நேரும். இலத்தின் அமெரிக்க நாடுகளுக்குத்தான் முதலில் தங்கள் கடன்களை வழங்கி சோதனை முயற்சியை சர்வதேச நாணய நிதியம் செய்து தோல்வியும் கண்டது.

> கடனாளியாக நாடுகளை உருவாக்கும் இந்த நிறுவனங்கள் உண்மையில் மக்கள் நல வேலைகளுக்கானவை இல்லை என்பதை நாங்கள் அறிய வேண்டும்.
>
> இவை நிதி மூலதனப் பெருக்கத்தையும் அமெரிக்க நிறுவனங்களை உலகு முழுக்க பரப்பி அமெரிக்க பொருளாதாரத்தை உயர்தி வைக்கவும் வேலை செய்கின்றன.

1970 களின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதாரக் கொள்கைகளில் சில மாற்றங்கள் இடம்பெற்றன. அவையாவன,

1. இறக்குமதிகளுக்குக் குறித்த நாடுகளில் இருக்கும் உள்நாட்டுத் தடைகளை நீக்குதல்.

2. (அரச செலவீனங்களை குறைத்தல் என்ற பெயரில்) அரச மானியங்களை நிறுத்துதல்.

3. வட்டி வீதங்களைக் கூட்டி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.

இவற்றின் மூலம் இந்த நிறுவனங்கள் உலகமயமாக்கலின் கைக்கூலிகள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். உலக மயமாக்கலின் மூலம் ஒரு நவகாலனித்துவ நிலையை அமெரிக்க அரசு விரும்புகிறது.

மூன்றாம் உலகக் கடனுடனும் உலகப் படிநிலையுடனும் இந்த நிறுவனகள் நெருங்கிய தொடர்புடையன.
உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் பொருளாதார ரீதியல் மட்டும் அல்ல, அரசியல் ரீதியிலும் மூன்றாம் உலக நாடுகளில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றன.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள தனியார் பல்கலைக்கழக எதிர்ப்பு பிரச்சினைகளுக்கு பின்னணியில் இலங்கை உலக வங்கியுடன் செய்த ரகசிய ஒப்பந்தமே உள்ளது. இந்த ஒப்பந்தம் இலவச கல்வியை முழுமையாக ஒழிக்கவே கைச்சாதிடப்பட்டது.

இப்படி உலக நாடுகளில் இந்த அமைப்புக்கள் உதவி என்ற பெயரில் பெரும் நெருக்கடிகளையே செய்கின்றன. இதிலும் குறிப்பாக 1990 களுக்கு பிறகு இந்த நிறுவனங்களின் அமைப்பாண்மை திறன் சார்ந்த மாற்றங்கள் (structural-adjustment programs) நிகழ்ச்சித்திட்டத்தின் மீது பெருமளவு விமர்சனங்கள் உள்ளன. இந்த திட்டங்கள் மூலம் அரசுகள் நாடுகளில் அடிப்படை வசதிகளை/சேவைகளில் ஈடுபடுவதை நிறுத்தல். இது முழுமையாக தனியார் கைகளுக்கு நாடுகள் செல்வதை ஊக்குவிக்கும் செயலாக இருக்கும்.

இந்த நிறுவனங்களை புனிதபடுதும் நபர்கள் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். இன்று உலகில் மூன்றில் இரண்டு வீதமான மக்கள் குறைந்த வாழ்கைத்தரத்திலும் குறைந்த வருமான நிலையிலும் உள்ளனர். ஆபிரிக்க ஆசிய மக்களில் ஒருகோடிக்கு மேல் சேரிகளில் வாழ்கிறார்கள். யுனிசெப் அமைப்பின் கூற்றின் படி ஒரு நாளுக்கு 22000 குழந்தைகள் வறுமையில் இறக்கிறார்கள். இதில் பல இறப்புகளுக்கு காரணமே இல்லை. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக 27-28 வீதமான சிறுவர்கள் குறை நிறையில் இருக்கிறார்கள். இந்த நாடுகளின் கடன் அளவு இன்னும் இன்னும் பெருகிய வண்ணமே இருகிறது.

கடனாளியாக நாடுகளை உருவாக்கும் இந்த நிறுவனங்கள் உண்மையில் மக்கள் நல வேலைகளுக்கானவை இல்லை என்பதை நாங்கள் அறிய வேண்டும். இவை நிதி மூலதனப் பெருக்கத்தையும் அமெரிக்க நிறுவனங்களை உலகு முழுக்க பரப்பி அமெரிக்க பொருளாதாரத்தை உயர்தி வைக்கவும் வேலை செய்கின்றன.

**"பட்டினியும் போசாக்கின்மையும் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்று. இதை விதி என்றும் பாவக் கணக்கு என்று சொல்லியும் நாங்கள் விலகி ஓட முடியாது என்பதை அறிவோம்".**

### இலங்கையில் வர்க்கக்கட்சி ஒன்றைக் கட்டுவதில் எதிர்நோக்கும் சவால்கள்

**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

1. இலங்கையில் தொழிலாளி வர்க்கக் கட்சியை மாக்சிச லெனினிச அடிப்படையில் கட்டியெழுப்புவதில் பல்வேறு பிரச்சனைகளும் நெருக்கடிகளும் இருந்து வந்துள்ளன.

2. இதில் மிக முக்கியமானது நிலவுடமைக் கருத்தியலும் அதன் பண்பாட்டுக் கூறுகளும் வலிமையாக இருந்து வருவது.

3. முக்கியமானதாக மதம் தனது ஆதிக்கத்தை சமூக அடித்தளம் வரை கொண்டுள்ளமை.


4. காலனித்துவத்துக்கு அடிபணிந்தும் இணங்கியும் வாழ்வதற்கு கருத்தால் சிந்தனையால் நடைமுறையால் பழக்கப்பட்டுப் போனமை.

5. இலங்கையில் அந்நியர் ஆதிக்கத்துக்கு எதிராக சுதந்திரப் போராட்டமோ அன்றி விடுதலைப் போராட்டமோ இடம் பெறாமை.

6. பௌத்த சிங்களப் பெரும்தேசியவாதமும் அதன் எதிர்நிலையான தமிழ்க் குறுந்தேசிய வாதமும் அரசியல் சமூகத் தளங்களில் அரசியல் ஆதிக்கமாக நீடித்து வருவது.

7. இலங்கையின் இடதுசாரி இயக்கம் தனது ஆரம்பத்திற்குப் பின்னான காலப்பகுதியில் பின்பற்றிய பாராளுமன்றப் பாதையிலான சந்தர்ப்பவாதச் சீரழிவுகள் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியை கட்டுவதற்குறிய சூழலைச் சிதைத்து வந்தமை.

8. அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் அவர்களது உள்ளூர் மேட்டுக்குடி வந்த உயர் வர்க்கக் கட்சிகளும் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியின் வளர்ச்சிக்கு குறுக்கே நின்று வந்தமை.



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA